1981 மே 5]

ஆ. அவை நிகழ்ச்சிகள் வானொலியில் தவறாக ஒலிபரப்பப் பெற்றது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் அண்ணாமலை யூனிவர்சிட்டி சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து இங்கே பேசிய விஷயத்தை வானொலியிலே கூறுகின்றபொழுது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அழகர்சாமி, அம்பிகாபதி, கருப்புசாமி என்று அறிவித்தார்கள். எங்களுடைய கட்சியில் ஏ. டி. கருப்பையா, ஆர். கருப்பையா அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். கருப்புசாமி என்று யாரும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. உங்களுக்கு ஏதாவது புதிதாக மெம்பர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தகவல் இருந்தால் தெரிவிக்கும்படி தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வானொலியிலே சில தவறுகள் ஏற்பட்டு விடுவதாக நான் அறிகிறேன். அந்தத் தவற்றைத் திருத்திக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம் போராட்டம்.

தமிழ்நாடு கருவூலத் துறை ஊழியர்கள் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான் கான், மு. அப்பாதுரை, மு. ஆறுமுகம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மு. அம்பிகாபதி ஆகியோர் 'தமிழ்நாடு கருவூலத் துறை ஊழியர்கள் போராட்டம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்னும் தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு, அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாக கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். திரு. மு. அம்பிகாபதி அவர்கள்

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த எட்டு மாத காலமாக கருவூலத் துறையில் இருக்கும் ஊழியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். 1980ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் வேலை நிறுத்தம் செய்த கருவூல ஊழியர்களுக்கு அந்தக் காலத்தைச் சம்பளம் இல்லா விடுப்பாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் பிற துறைகளில் வேலை நிறுத்தங்கள் நடந்த காலத்திற்கு சம்பளம் உள்ள விடுப்பாக அறிவித்திருக்கிறது. உதாரணமாக, தலைமைச்